பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 12 2025** **12 40**

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி அசாம் மாநிலம் பிரம்மபுத்திரா நதியில் **MV Charaideo** படகில் மாணவர்களுடன் **Pariksha Pe Charcha** நிகழ்ச்சியில் இன்று கலந்துரையாடினார்.

**2.** நாடு முழுவதும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு லட்சம் பேர் **Fit India** சைக்கிள் உடற்பயிற்சி செய்வதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

**3.** டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையின் யாழ்ப்பாணம் பகுதியில் நிவாரணப் பொருட்களை இந்தியா வழங்கியது.

**4.** ரஷ்யா - யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவர மியாமியில் அமெரிக்க அதிகாரிகள், ரஷ்ய பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

**5.** **19** வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் முதலில் பேட்செய்து வருகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி அசாம் மாநிலம் பிரம்மபுத்திரா நதியில் **MV Charaideo** படகில் மாணவர்களுடன் தேர்வுக்கு தயாராவது குறித்து **Pariksha Pe Charcha** நிகழ்ச்சியில் இன்று கலந்துரையாடினார்.

குவஹாத்தியில் அருகேயுள்ள **Swahid Smarak Kshetra**-வில் அசாம் இயக்கத்தில் இன்னுயிர் ஈந்தவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தினார்.

அசாம் மாநிலம் **Namrup**-ல் அம்மோனிய உர தொழிற்சாலை உட்பட **12** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

<<<<>>>>

நாடு முழுவதும் **Fit India** இயக்கத்தின்கீழ் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு லட்சம் பேர் சைக்கிள் உடற்பயிற்சி செய்வதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி கடற்கரை அருகே **Fit India** சைக்கிள் உடற்பயிற்சி இயக்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில் இன்று உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் **Fit India** இயக்கம் மூலம்

உடற்பயிற்சி குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

தில்லியில் கடந்த ஆண்டு தொடங்கிய இந்த சைக்கிள் உடற்பயிற்சியில் **500** பேர் கலந்துகொண்டதாக கூறிய அவர், தற்போது **700** மாவட்டங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் இப்பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, **Fit India** இயக்கம் மூலம் மக்களின் நலன் மற்றும் ஆரோக்கியம் மேம்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறை மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை தெரிவிக்குமாறு அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு, எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வேளாண் பணிகளை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக விவசாயிகள், துறைசார்ந்த நிபுணர்கள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் சிறந்த செயல்திட்டங்களை வகுக்க வேண்டும் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையின் யாழ்ப்பாணம் பகுதியில் நிவாரணப் பொருட்களை இந்தியா வழங்கியது.

“ஆபரேஷன் சாகர் பந்து” திட்டத்தின்கீழ் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள துணை தூதரகம் மூலமாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இலங்கையில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இந்தியா மருத்துவக் குழுக்களையும், மீட்புக் குழுக்களையும் அனுப்பி வைத்துள்ளது.

<<<<>>>>

பங்களாதேஷில் ஏற்பட்ட கலவரத்தில் கொலை செய்யப்பட்ட **Mymen Singh** என்பவர் எந்த மதத்திற்கு எதிராகவும் செயல்படவில்லை என்று அந்நாட்டு காவல்துறை சிறப்புப் படை தெரிவித்துள்ளது.

தனியார் நிறுவனத்தில் வேலைபுரிந்த இவரை கலவரத்தில் ஈடுபட்ட கூட்டம் கொலை செய்ததையடுத்து **10**க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த சிறப்புப் படையின் இயக்குநர் திரு. **Naimul Hassan** தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவின் **Westrand** பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் **9** பேர் உயிரிழந்தனர்.

ஜோகன்னஸ்பர்க் அருகேயுள்ள பகுதியில் இன்று நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் ஏராளமானோர் காயமடைந்துள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் தென்னாப்பிரிக்க காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவர மியாமியில் அமெரிக்க அதிகாரிகள், ரஷ்ய பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விளாடிமிர் புதினின் சிறப்பு பிரதிநிதி **Kirill Dmitriev,** அமெரிக்க சிறப்பு பிரதிநிதி **Steve Witkoff** உடனான பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றதாக கூறினார்.

கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கிய ரஷ்யா-யுக்ரைன் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பின் முயற்சிகளை அடுத்து இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

<<<<>>>>

வட இந்தியாவில் கடும் குளிர் காரணமாக பனிமூட்டம் அதிகரித்துள்ளது.

இதையடுத்து புதுதில்லி உட்பட வட மாநிலங்களை சேர்ந்த பல்வேறு விமான நிலையங்களில் விமான சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

விமானப் பயணிகள் இது தொடர்பாக விமான நிறுவனங்களுடன் தொடர்புகொள்ள விமான நிலைய ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

வெனிசுலாவின் எண்ணெய்க் கப்பலை அமெரிக்கா பிடித்து வைத்துள்ளதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

வெனிசுலாவுக்கு செல்லும் எண்ணெய்க் கப்பல்களை தடை செய்ய அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கடந்த செய்வாய்க்கிழமை உத்தரவிட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு வெனிசுலா அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் புகார் அளிக்கப்போவதாகவும், பிற நாடுகளுடன் இதுகுறித்து ஆலோசனை மேற்கொள்ளப்போவதாகவும் வெனிசுலா அரசு கூறியுள்ளது.

வெனிசுலாவில் எண்ணெய் ஏற்றுமதி செய்து கிடைக்கும் நிதியை போதைப்பொருள் புழக்கத்திற்கு பயன்படுத்துவதாக கூறி, அந்நாட்டிற்கு எண்ணெய்க் கப்பல் செல்ல அமெரிக்கா தடை விதித்துள்ளது.

கடந்த சில வாரங்களில் கரீபியன் கடற்பகுதியில் வெனிசுலாவை சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திரு. இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்கு ஊழல் வழக்கில் 17 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக போராட்டம் நடத்த வேண்டும் என்று இம்ரான் கான் தமது ஆதரவாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

73 வயதான இம்ரான் கான் கடந்த 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார்.

<<<<>>>>

சைபர் குற்றங்கள் குறித்து மத்திய தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வாட்ஸப் போன்ற செயலியை இந்த Ghost Pairing, செயலிழக்கச் செய்யும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் வாட்ஸ்அப்பில் இருக்கும் பல்வேறு தகவல்கள் பதிவிறக்கம் செய்து தவறாக பயன்படுத்தப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாட்ஸ்அப்பில் வரும் செய்திகளுக்கு பதிலளிக்க வேண்டாம் என்றும் தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேயாவின் **Bondi** கடற்கரையில் தீவிரவாத தாக்குதலில் **15** பேர் உயிரிழந்த தையடுத்து அந்நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் **Antony Albanese** தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் அறிக்கை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாத த்திற்குள் வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படும் என்றும் **Antony Albanese** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற அகில இந்திய பள்ளிகளுக்கு இடையேயான தடகளப் போட்டியில நீளம் தாண்டுதல் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்

யோபினுக்கு, அரியலூரில் அரசு மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த ஆசிரியர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

விளையாட்டுத் துறையில் மேலும் சாதனைகள் படைக்க இந்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக யோபின் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte - Yobin- 33 Sec)**

**<<<<>>>>**

ஜம்மு-கஷ்மீரு உணவு தானியங்களை கொண்டு செல்ல சிறப்பு சரக்கு ரயில் தில்லி - அனந்த்நாக் சரக்கு ரயில் முனையத்தில் இருந்து இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உணவுக் கழகம் சார்பில் இயக்கப்படும் இந்த சரக்கு ரயில் கஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியின் பல்வேறு இடங்களுக்கு உணவு தானியங்களைக் கொண்டு செல்ல உள்ளது.

ஃபெரோஸ்பூர் பகுதியைச் சேர்ந்த அஜித்வால் ரயில் நிலையத்தில் இருந்து ஆயிரத்து 384 டன் உணவு தானியங்கள் அனந்த்நாக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து ஜம்முவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**<<<<>>>>**

துபாயில் நடைபெறும் **19** வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக முதலில் பேட் செய்து வரும் பாகிஸ்தான், சற்றுமுன் வரை **26** ஓவரில் **2** விக்கெட் இழப்பிற்கு **169** ரன் எடுத்துள்ளது.

----------------

தெற்காசிய மகளிர் கிளப்புகளுக்கு இடையேயான கால்பந்து போட்டியின் சாம்பியன் பட்டத்தை ஈஸ்ட் பெங்கால் அணி வென்றது.

நேபாளத்தின் காத்மாண்டுவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் **3-0** என்ற கோல் கணக்கில் நேபாள காவல்துறை அணியை வென்றது.

<<<<The End>>>>